பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 29 புதன்கிழமை 14.08.2024 கதிர் 280

## நாகப்பட்டினத்துக்கான கப்பல் பயணக் கட்டணம் அறிவிப்பு

இந்தியாவின் நாகப்பட்டினம் - காங்கேசன்துறை இடையிலான பயணிகள்கப்பல்சேவை ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் பயணக்கட்டணம் தொடர்பாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்த கப்பல் சேவை ஜூலை 16 முதல் உத்தி யோகபூர்வமாக சேவையில் ஈடுபடவுள்ளது. கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 14 இந்தியாவின் நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன்துறைக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டது.

அந்த வகையில் நாகப்பட்டினத்திலிருந்து 'சிவகங்கை' பயணிகள் கப்பலானது வெள்ளோட்டத்திற்காக கடந்த செவ்வாய்க்கிழமை 12 மணியளவில் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வருகை தந்தது.

இந்த சிவகங்கை கப்பலில் சாதாரண வகுப்பில் 133 ☞ 8

## இன்னும் 5 வருடங்களுக்காவது ரணிலுக்குச் சந்தர்ப்பம் வேண்டும்

### இரஞ்சுகிறார் ஐ.தே.க. உபதலைவர்

தேர்தலில் மக்கள் பிழையான தீர்மானம் எடுத்தால் அதன் பெறுபேற்றை மக்களே அனுபவிக்க நேரிடும். அதனால் ரணில் விக்ரமசிங்கவுக்கு இன்னும் ஐந்து வருடங்களுக்காவது சந்தர்ப்பம் வழங்க மக்கள் தீர்மானிக்க வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் உபதலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். ஊடகப் பரப்புரைகளுக்கும் அனுபவமில்லாத அரசியல்வாதிகளின் பொய் வாக்குறுதிகளுக்கும் மக்கள் ஏமாந்துவிடக்கூடாது என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை மீட்டெடுத்து, முன் னெடுத்துச்செல்லும் சந்தர்ப்பத்தில் மிகவும் தீர்மானமிக்க தேர்தலுக்கு முகம்கொடுத்துள்ளோம். நாட்டைத் தொடர்ந்து முன்னெடுத்துச்செல்ல யார் பொருத்தம் என்பதைத் தெரிவுசெய்வதற்குதற்போது மக்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

நாட்டின்ஜனாதிபதியைத் தெரிவு செய்வதில் கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் மக்கள் பல்வேறு காரணங் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் முடிவெடுக்காமல் தடுமாறுகிறது என்றும், கடைசியில் தமிழ் பொது வேட்பாளரைத் தவிர அதற்கு வேறு தெரிவுகளே இருக்க முடியாது என்றும் நேற்றையதினம் விமர்சனங்களைப்பார்க்க முடிந்தது. தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மத்திய குழுக் கூ-ட்டத்திற்குப் பின்னர் இந்த விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

பொது வேட்பாளராக முன்னிறுத்தப்பட்ட அரியநேந்திரன் மீது கட்சி ஒழுக்காற்று நடவடிக்கையைத் தொடங்கியிருப்பதைப் பொறுப்ப முடியாத, ஏற்கமுடியாத விளைவுகள் அவை. அரிய நேந்திரன் கட்சிக்கு உரிய விளக்கம் அளிக்கும்வரையில் அவர் கட்சி நிகழ்வுகளில் பங்கேற்க முடியாது என்கிற கட்சியின் தீர்மானமே கட்சி தமிழ் பொது வேட்பாளரைநிராகரித்திருப்பதற்கான அடையாளம்தான். அதனை வெளிப்படையாகஅறிவிக்கவில்லை. அதற்கொரு காரணம் உண்டு.

தமிழ் பொது வேட்பாளருக்கு எதிர்ப்பு என்றால் யாரை ☞ 2

## 36 பேர் இதுவரையிலும் கட்டுப்பணம் செலுத்தினர்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக நேற்றுவரை 36 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இம்முறைஜனாதிபதித்தேர்தலுக்காக அங்கீகரிக்கப்பட்ட 19 அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சியும் 16 சுயேச்சை வேட்பாளர்களும் கட்டுப்பணம் செலுத்தியவர்களில் அடங்குவர்.

வேட்பாளர்களுக்காக கட்டுப்பணம் செலுத்தும் காலம் இன்று நண்பகல் 12.00 மணியுடன் நிறைவடைகின்றது.

இதேவேளை, இலங்கையின்பிரபல வர்த்தகரும் ஊடக உரிமையாளருமான சர்வஜன சக்தி கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளருமான திலித் ஜயவீரவுக்கு நேற்றுக் கட்டுப்பணம் ☞ 8

# சஜித்தை ஆதரிக்க 27 கட்சிகள் முடிவு

### புரிந்துணர்வு உடன்படிக்கைகளிலும் கைச்சாத்து




வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கியமக்கள்கூட்டணியின்தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு 27 கட்சிகள் ஆதரவு வழங்கவுள்ளன. இது தொடர்பானஉடன்படிக்கைகளிலும் அவை கையெழுத்திட்டுள்ளன.

அரசியல் தளத்தில் பிரதானமாக இயங்கும் தமிழ் முற்போக்குக் ☞ 2

## ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் பொரமுனவைக் கைப்பற்றுவோம்

### சந்திரசேன எம்.பி. சூளுரை

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியைக் கைப்பற்றுவோம். பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் மீண்டும் புதிய ஆளும் தரப்பொன்றைஉருவாக்குவோம் என்று ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேனதெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப் பின்பின்னர்செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

பொது ஜன பெரமுனவின்அதிகாரத்தைக் கைப்பற்றுவோம் என்று குறிப்பிட்டதில் எவ்விதத் தவறும் கிடையாது. ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் அதிகாரத்தை கைப்பற்றுவோம் என்பதை மீண்டும் குறிப்பிடுவேன். பொது ஜன பெரமுனவை நாங்கள் தான் உருவாக்கினோம். ☞ 2

## போதைப் பொருள் ஒழிப்புக்காக தனியான நிறுவனம் உருவாகும்

### அதிரடிப்படை அலுவலகத்தை திறந்துவைத்து ஜனாதிபதி உரை

போதைப்பொருள் ஒழிப்புக்காக தற்போதுள்ள அனைத்து பொலிஸ், இராணுவ மற்றும்சிவில்நிறுவனங்களை ஒன்றிணைத்து போதைப்பொருள்தடுப்பு சட்டத்தின் கீழ் தனியொருநிறுவனமாகஉருவாக்கி, அதற்குஉரியஅதிகாரங்கள்வழங்கப்படும் என்றுஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் ஸ்ரீ ஜெயவர்தனபுர விசேட அதிரடிப்படைநடவடிக்கை மையத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்றுக்கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

செப்டெம்பர் 21 ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நாட்டில் எந்த வகையிலும் வன்முறைகளுக்கு இடமளிக்கக் கூடாதுஎனவலியுறுத்திய ஜனாதிபதி, அது தொடர்பில்அனைவரும்பொறுப்புடன் செயற்பட ☞ 8

## தம்மிக்கதான் ஒரே பிரச்சினை வெளியேறியோர் திரும்புவார்கள்

### இராஜாங்க அமைச்சர் பிரேம்லால் தெரிவிப்பு
### ரணிலுக்கு ஆதரவில்லை என்பதிலும் உறுதி

பொதுஜன பெரமுனவின் சார்பில் கோடீஸ்வரர் தம்மிக்க பெரேராவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தியதனால் அதிருப்தியடைந்தேகட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்தார்கள். அப்படி விலகிச் ☞ 2

## நாளை முதல் தேசிய மக்கள் சக்தி வீடு வீடாகச் சென்று பரப்புரை

வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு நாளைமுதல்வீடுவீடாகச் சென்றுபரப்புரைசெய்யவுள்ளார் என்று தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. அதன்ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

தேர்தல் பரப்புரையின்போது தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுவதுகுறித்துத்தான் அக்கறைப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். தேர்தலில் போட்டியிடுவதற்கும் தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபடுவதற்கும் எவருக்கும் உரிமையுண்டு என இன்றுதெரிவித்துள்ளார்.

தேர்தல்பிரசாரத்தின் போது ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியின் வேட்பாளரின்உயிருக்கு ஆபத்து என்ற கருத்து பொது மக்களிடையே ஏற்படுத்தப்பட்டால், அத்தகைய அரசியல் சூழலை தோற்கடிக்க வேண்டும் என அவர் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

'எங்கள் பாதுகாப்பு குறித்து நாங்கள் அதிகம் கவலைப்படவில்லை. தேர்தலில்போட்டியிடவும், மக்களுக்கு எங்களின் செய்தியைதெரிவிக்கவும் எங்களுக்குநியாய ☞ 2

## மாகாண சபை கட்டமைப்பின் முழுதான நடைமுறையாக்கம்

### புளொட், ரெலோவிற்கு சஜித் அளித்த வாக்குறுதி இதுவே

மாகாண சபைக் கட்டமைப்பை முழுமையாகநடைமுறைப்படுத்துவதில் நான் உறுதியாக வுள்ளேன். அது தொடர்பாக நான் வெளிப் படையாகவும் பேசி வருகின்றேன். யாருக்கும் பயந்து சாக்குப்போக்குகளைச் சொல்வது இல்லை. ஜனாதிபதியாக ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஆதரிக்கப் போகிறீர்கள் என்றொரு அடுத்த கேள்வி முன்வைக்கப்படும். உண்மையில் தமிழ் அரசுக் கட்சிக்குள் அதற்குப் பதில் இல்லை. அது பலதையும் யோசிக்கிறது. புதிய அணுகுமுறைகளுக்கு வாய்ப்பிருக்கிறதா என்று பார்க்கின்றது.

இன்னும் முக்கியமாக, பொது வேட்பாளரைஎதிர்க்கும், நிராகரிக்கும் தமிழ்அரசுக்கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர்களானசுமந்திரன்மற்றும் சாணக்கியன் ஆகியோர் ரணிலை ஆதரிக்கத்தான் இந்த நாடகம் என்கிற விமர்சனங்களைக்கூட காணமுடிந்தது. சமூக ஊடகங்களில் இது அதிகளவில் பகிரப்படுகின்றது. ஆனால், தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் ரணிலுக்கு ஆதரவாக எந்தக் கருத்துக்களும் இருக்கவில்லை. அங்கிருந்தவர்களை ஆச்சரியப் படுத்தும் வகையில் சுமந்திரன், சாணக்கியனின் கருத்துக்களேகூட ரணிலுக்கு ஆதரவாக இருக்கவில்லை. வெற்றிபெற முடியாதவர் என்று தெரிந்த பிறகு ரணிலை ஆதரிப்பதில் எந்தப் பயனும் இல்லை என்பதே மத்திய குழுக் கூட்டத்தில் ஓங்கி ஒலித்த குரலாக இருந்தது.

பிரதான சிங்கள வேட்பாளர்களைத் தாண்டி இடதுசாரிகளுடன் பேசிப் பார்த்தால் என்ன என்கிற புதிய அணுமுறை தொடர்பான யோசனைகளும் கூட்டத்தில அலசப்பட்டிருக்கின்றன. குறிப்பாக தொடக்க காலத்தில் இருந்தே தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஆதரவாக இடதுசாரிகள் இருந்திருக்கிறார்கள். போர் தீவிரமான பின்னர் தற்போதைய பிரதமர் டினேஸ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார போன்றவர்கள் பௌத்த, சிங்கள பெருந்தேசிய வாதத்திற்குள் கரைந்துபோய் சோரமிழந்தார்கள் என்பது வேறுவிடயம் என்றபோதும், உண்மையான இடதுசாரிகள் தமிழர்களுக்கு ஆதரவாகவே இருந்திருக்கிறார்கள். தமிழர்கள் எப்போதும் சிங்களப் பெருந்தேசியக் கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கே ஆதரவளித்து வருவது குறித்த அந்த இடதுசாரிகள் கவலை அடைந்திருக்கின்றனர். ”நாங்கள் உங்களுக்கு ஆதரவாக இருந்தாலும் நீங்கள் எங்களை ஒருபோதும் ஒரு பொருட்டாக மதித்து ஆதரவளித்தது இல்லைத்தானே” என்று இடதுசாரித் தலைவர்கள் தமிழ்த் தலைமைகளிடம் கேள்வி எழுப்பியுள்ளனர். எனவே இந்தத் தேர்தலில் இடதுசாரிகளுடன் அணி சேர்வதன் சாதக பாதகங்களை ஆராய்ந்தால் என்ன என்பது தொடர்பில்கூட மத்திய குழுக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டிருக்கின்றது.

இது தொடர்பில் எந்தவிதத் தீர்மானங்களும் மத்தியகுழுவால் எடுக்கப்படவில்லை என்றாலும் தமிழ்அரசுக்கட்சிதனதுவழக்கமான தளத்திற்கு வெளியேயும் சிந்திக்க முற்படுகின்றது என்று தெரிகிறது. எனவே அது ரணிலை ஆதரிக்கப் போகின்றது என்று கொக்கரித்துத் திரிவோர் தமிழ் அரசுக் கட்சியின் புதிய அணுகல்கள் குறித்தும் கொஞ்சம் கவனம் செலுத்தினால் இன்னும் 'பெட்டர் கென்டன்ட்' கிடைக்கக்கூடும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சஜித்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டணி முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகளுக்கு மேலதிகமாக இந்த 27 கட்சிகளும் சஜித்தை ஆதரிப்பதற்குத் தீர்மானித்துள்ளன.

மனிதநேய மக்கள்கூட்டணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய லங்கா பொது ஜன கட்சி, ஜனநாயக மக்கள் காங்கிரஸ் மற்றும் தேசிய முன்னணி உள்ளிட்ட இந்தக் கடசிகள் சஜித்துடன் நேற்று உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.

இதேவேளை, கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன உள்ளிட்ட ஐக்கிய இடதுசாரி முன்னணியும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளது.

## நாளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மானமற்றும்ஜனநாயகஉரிமைகள் உள்ளன,' என்றார்.

குறிப்பிட்ட வேட்பாளரின் பாதுகாப்பு குறித்து நீங்கள் கேள்வி எழுப்பினால், அது ஜனநாயகம் அல்ல, தேர்தல் பரப்புரையின்போது ஒரு குறிப்பிட்ட கட்சியின் வேட்பாளர் கொலை செய்யப்படுவார் என்ற கருத்தை சமூகம் உருவாக்கினால், அத்தகைய அரசியல் சூழல் எதற்கு இருக்கவேண்டும்? தோற்கடிக்கப்பட்ட எவருக்கும் தேர்தலில் போட்டியிடவும், தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடவும் உரிமை உண்டு, எனவே உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறப்படுவதைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை, ஏனென்றால் நாங்கள் எங்கள் ஜனநாயக உரிமைகளை மகிழ்விக்கிறோம்.

தேசிய மக்கள் இம்முறை வலுவான மற்றும் வெற்றிகரமான தேர்தல் பரப்புரையைத் திட்டமிட்டுள்ளதாகக் கூறிய அவர், அவர்கள் ஏற்கனவே நாட்டில் 50 சதவீதத்திற்கும் அதிகமான குடும்பங்களை சந்தித்துள்ளனர் என்றும் கூறினார்.

'எங்கள் பரப்புரையில் ஒவ்வொரு வீட்டையும் இரண்டு முறை பார்வையிட திட்டமிட்டுள்ளோம். ஒகஸ்ட் 15 மூதல் வீடு வீடாகப் பரப்புரை செய்யும் திட்டத்தை நாங்கள் தொடங்குவோம் - என்று அவர் கூறினார்.

## இன்னும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் அடிப்படையில் தீர்மானம் எடுத்திருந்தார்கள். கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் மக்கள் பிழையான ஒருவரை தெரிவுசெய்ததன் மூலம் நாடு வங்குராத்தே நிலைக்குச் சென்றது.

அதனால் இந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வேட்பாளரின் பிரபல்யம், ஊடகப் பரப்புரை, பொய்வாக்குறுதிகளை நம்பி ஏமாந்துவிடாமல், வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை ஸ்திர நிலைக்கு கொண்டு வந்துள்ள ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்க வேண்டும்.

அவரின் அரசியல் அனுபவமும் ஆளுமை காரணமாகவே குறுகிய காலத்தில் நாட்டை ஸ்திர நிலைக்கு கொண்டுவர முடிந்திருக்கிறது. நாட்டை அபிவிருத்தியடையச் செய்ய ஜனாதிபதி முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்களை தொடர்ந்து கொண்டு சென்றால் மாத்திரமே, நாடு மீண்டும் வீழ்ச்சியடையாமல் பாதுகாத்துக்கொள்ள முடியும். மக்கள் இந்த உண்மையை உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஐக்கிய தேசிய கட்சி எப்போதும் ஒருகொள்கையின் அடிப்படையிலே செயற்படுகிறது. கடந்த பொதுத் தேர்தலின்போதும் நாங்கள் உண்மையைத் தெரிவித்தோம். என்றாலும் மக்கள் அதனை ஏற்றுக்கொள்ளாமல் எங்களை நிராகரித்தனர். இறுதியில் நாட்டு மக்களே துன்பத்தில் உழன்றனர்.

அதனால் இந்தத் தேர்தலில் எமது எதிர் வேட்பாளர்களின் கூட்டங்களில் காணும் மக்கள் கூட்டங்களை பார்த்து மக்கள் ஏமாந்துவிடக்கூடாது. ரணில் விக்ரமசிங்க போன்ற ஒரு தலைவர் இருந்திருந்தால் பங்களாதேஷுக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்காது. ரணில் விக்ரமசிங்க போன்ற அனுபவமிக்க ஒருவரை இனி ஒருபோதும் தேடிக்கொள்ள முடியாது.

அதனால் நாட்டை தொடர்ந்து முன்னெடுத்துச்செல்ல ரணில் விக்ரமசிங்கவுக்கு மேலும் 5 வருடங்களுக்காவது மக்கள் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். உலக நாடுகளுடன் அவருக்கு இருக்கும் தொடர்புகளைப் பயன்படுத்திக்கொண்டு நாட்டை முன்னேற்றுவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பார்.

எனவே மக்கள் தங்களின் பிள்ளைகளின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு இந்த தேர்தலில் யாரை தெரிவு செய்ய வேண்டும் என்பதை நிதானமாக சிந்தித்து தீர்மானிக்க வேண்டும். பிழையான தீர்மானம் எடுத்தால் நாடு மீண்டும் வீழ்ச்சியடைவதை யாராலும் தடுக்க முடியாமல் போகும் என்றார்.

## தம்மிக்கதான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்றவர்கள் விரைவில் மீண்டும் இணைந்துகொள்வார்கள் என்று இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர தெரிவித்தார்.

பொது ஜன பெரமுனவின் அலுவலகத்தில் ராஜபக்சக்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பக்கம் செல்லவுமில்லை, கட்சியை விட்டு நீங்கவுமில்லை. பொது ஜன பெரமுன தலைமையிலான ஆளும்தரப்புத் தான் தற்போதும் உள்ளது. அதில்தான் நான் இன்னும் இருக்கிறேன்.

இராஜாங்க அமைச்சர் சானக வகும்பர தலைமையில் இரத்தினபுரி மாவட்ட தொகுதி அமைப்பாளர் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. நான் அதில் கலந்துக் கொண்டேன். இதனை தொடர்ந்து நான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதாக குறிப்பிடப்பட்டது. தவிர, ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவதாக நான் எங்கும் குறிப்பிடவில்லை. பேச்சுக்குச் சென்றதை ஆதரவளிப்பதாகக் கருத முடியாது.

கட்சியின் கொள்கைகளை காட்டிக் கொடுத்து அரசியல் செய்யப் போவதில்லை. பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேராவை வேட்பாளராக களமிறக்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து தான் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பக்கம் சென்றார்கள்.

கட்சியின் வேட்பாளராக நாமல் ராஜபக்ஷ களமிறக்கப்பட்டுள்ளார். ஆகவே விலகிச் சென்றவர்கள் மீண்டும் எம்முடன் ஒன்றிணையலாம். நெருக்கடியான சூழ்நிலையின் போது விலகிச் செல்வது முறையற்றது என்பதை அரசியல்வாதிகள் விளங்கிக்கொள்ள வேண்டும் என்றார்.

# விச வாயு தாக்கி இருவர் இறப்பு மாலபேயில் நேற்றுச் சம்பவம்

மாலபே, கஹந்தோட்டை வீதி, ஜயந்தி மாவத்தையில் அமைந்துள்ள வீடொன்றினுள் விச வாயு தாக்கி இருவர் உயிரிழந்துள்ளனர். இதுதொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் தொடங்கியுள்ளனர்.

65 மற்றும் 45 வயதுடைய இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இரசாயனங்கள் சிலவற்றை கலக்கச் சென்றபோது இருவரும் இந்த விச வாயுவை சுவாசித்ததால் மூச்சுதிணறல் காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவர்கள் முறையே மொனராகலை மற்றும் கஹந்தோட்டையைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# பாவனைக்குதவா பருப்புச் சிக்கியது

கொழும்பு, புறக்கோட்டையில் உள்ள களஞ்சியசாலை ஒன்றிலிருந்து மனித பாவனைக்கு உதவாத 1,000 கிலோ கிராம் பருப்பு தொகை கைப்பற்றப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இந்த பருப்பு கைப்பற்றப்பட்டுள்ளது. சில்லறை விற்பனை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கத் தயாராக இருந்தபோதே அது கைப்பற்றப்பட்டதாக நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களில் பெரும்பாலானோர் ஜனாதிபதியின் பக்கமே இப்போது உள்ளனர். கட்சியின் பெயர் பலகையை மாத்திரம் அவர்கள் (ராஜபக்சக்கள்) வைத்திருப்பதில் எவ்வித பயனுமில்லை. கட்சியின் பதவி நிலைகளில் மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும்.

பொது ஜன பெரமுனவின் உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் புதிய அரசியல் கூட்டணி உருவாக்கப்படும். இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலில் கூட்டணிக்கு ஊடாகவே போட்டியிடுவோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் வகையில் முதலாவது தேர்தல் பரப்புரைக் கூட்டத்தை ஒகஸ்ட் 17 அநுராதபுரம் சல்காது மைதானத்தில் நடத்துவோம். எமது ஆதரவு இல்லாமல் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்சவினால் அரசியல் கூட்டங்களை நடத்த முடியாது.

பொது ஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆளும்தரப்பைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளார்கள். நாட்டு மக்களும் இதே நிலைப்பாட்டில் தான் உள்ளார்கள்.

ஆகவே மக்களின் அபிலாஷைகளுக்கு அமைய செயற்படுமாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடம் வலியுறுத்துகிறோம் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# திருக்கோவிலில் இல்மனைற் அகழ முயற்சியா? பொது மக்கள் எதிர்ப்பினால் பணிகள் நிறுத்தம்



(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தின் கரையோர திருக்கோவில் பிரதேசத்தில் மீண்டும் இன்மனைற் அகழ்வதற்கான களவிஜயத்தை மேற்கொண்டுவந்த அதிகாரிகளிடம் பொதுமக்கள் பாரிய எதிர்ப்பை தெரிவித்தனர்.

அதனால் அப்பகுதியில் பதட்டநிலை ஏற்பட்டது.

இச்சம்பவம் திங்கட்கிழமை திருக்கோவில் விநாயகபுரம் கோரைக்களப்பு முகத்துவாரப்பகுதியில் இடம்பெற்றது.

திங்கட்கிழமை அதிகாலை இல்மனைற் அகழ்வுக்கு பொறுப்பான தம்சிலா எக்ஸ்போர்ட் கம்பனி நிர்வாகிகளும் ஊழியர்களும் முகத்துவாரத்தில் கூடினர். கள ஆய்வுக்கான இயந்திரம்மற்றும்உபகரணங்களும்கொண்டுநிறுத்தப்பட்டன.

அங்கு இல்மனைற் அகழ்வதற்கான சாத்தியவள அறிக்கை தயாரிப்பதற்காக இந்தக் குழுவினர் வந்திருப்பதாக தகவல்கள் காட்டுத்தீபோல் பரவியது. ஒருசில நிமிடங்களில் பொதுமக்களும் குவியத்தொடங்கினர்.

அதேவேளை, அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசன் திருக்கோவில் பிரதேச செயலாளர் த. கஜேந்திரன் காரைதீவு முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் சட்டத்தரணி கே.ஜெயசுதன் மற்றும் பலர் ஒன்று கூடினர். பொலீஸாரும் அதிரடிப்படையும் அங்கு நின்றிருந்தார்கள்.

இதற்கு பிரதேச சபை அனுமதி பெறப்பட்டதா? என்பதை அறிய சற்று நேரத்தில் பிரதேச சபையின் செயலாளர் திருமதி ஜெயந்தி வீரபத்திரன வரவழைக்கப்பட்டார். அதன் பின்பு அங்கு பேச்சு இடம்பெற்றது.

அங்கு குறிப்பிட்ட சிலரே செல்ல அனுமதிக்கப்பட்டனர். ஏனைய பொதுமக்கள் சுமார் 500 மீற்றருக்கு அப்பால் பொலிஸாரால் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

அங்கு அதன் போது கம்பனி நிர்வாகி பொறியியலாளர் கூறுகையில் –

நாங்கள் இங்கே இல்மனைற் அகழ்வுக்காக வரவில்லை. அது தொடர்பான ஆய்வு ஒன்றை மேற்கொள்ளவே வந்திருக்கிறோம். அகழ்வு என்றால் பிரதேச சபையில் நாங்கள் அனுமதிபெற வேண்டும். ஆனால் இது ஆய்வு. எனவே பிரதேச சபை அனுமதி தேவையில்லை. நேரடியாக கரையோரம் பேணல் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அனுமதி பெற்று வந்திருக்கின்றோம். – என்றார் .

அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், சட்டத்தரணி ஜெயசுதன் கூறுகையில் –

மக்கள் விரும்பாத முயற்சியை நீங்கள் தொடர்ந்து செய்கிறீர்கள். நாங்கள் அதாவது பொதுமக்கள் இதனை கடந்த நான்கு ஆண்டுகளாக முற்றாக எதிர்த்து வந்திருக்கின்றோம். இந்த நிலையில் இப்பொழுது தேர்தல் காலம். எனவே, இப்படியான வேளையில் இச்சம்பவம் இன முரண்பாடுகளை குழப்பங்களைத் தோற்றுவிக்கலாம். எனவே இம் முயற்சியை கைவிடுங்கள் . எமக்கு இந்த அகழ்வு மற்றும் ஆய்வு தேவையில்லை. இதனை நிறுத்தி விட்டு நீங்கள் பாதுகாப்பாக வெளியேறுங்கள். – என்றனர்.

கரையோரம் பேணல் மற்ற கரையோர மூலவளமுகாமை திணைக்கள பணிப்பாளர் நாயகம் ஆய்வுக்கான அனுமதியை வழங்கியுள்ளார் என்று ஆவணம் காண்பிக்கப்;பட்டது.

அங்கு நின்ற சமூக ஆர்வலர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில் –

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு எமது பிரதேசத்திற்கு ஆஸ்திரேலிய நிறுவனமொன்றுவந்து எமக்குத்தெரியாமல் இல்மனைற் அகழ்வுப் பணிக்கான ஆரம்பவேலையை மேற்கொள்ளத் தலைப்பட்டனர்.

அப்போது பொது மக்கள் கிளர்ந்தெழுந்து எதிர்ப்புத் தெரிவித்தனர். அதுமட்டுமல்ல மணிக்கூண்டுக் கோபுரத்திலிருந்து பாரிய எதிர்ப்பு மழைக்கு மத்தியில் ஊர்வலத்தை நடத்தி பிரதேச செயலரிடம் மகஜரும் கையளித்தோம். அத்துடன் அத்தத் திட்டம் கைவிடப்பட்டது.

திருக்கோவில் பிராந்தியத்தில் இன்மனைற் அகழ்வதற்கு மக்கள் எதிர்ப்புத்தெரிவிக்கின்றனர்.திருக்கோவில் பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச சபைக்கு ஏகப்பட்ட முறைப்பாடுகள் எதிர்ப்புத்தெரிவித்து கிடைக்க பெற்றுள்ளன.

பிரதேச சபையில் கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில் எமக்குத்தெரியாமல் மக்களுக்கு அறிவிக்காமல் இங்கு இன்று மீண்டும் வந்து செய்கின்ற வேலைக்கு நாம் பூரண எதிர்ப்பைத் தெரிவிக்கிறோம்.

எந்தக் காரணம்கொண்டும் திருக்கோவில் பிரதேசகனியவளத்தை சூறையாட அனுமதிக்கமாட்டோம் என்றும் கூறினார்.

அதனிடையே அங்கு வந்த பொதுமக்கள் சிங்களத்திலும் தமிழிலும் மாறிமாறி உரக்கக்குரல்கொடுத்தனர்.

அவர்கள் கூறியவை வருமாறு –

எமது கடலோரவளங்களை இழக்க நாம் தயாரில்லை.இல்மனைற் அகழ்ந்தால் எமது நிலத்தடிநீர் உவர்நீராகும்.இங்குள்ள தென்னைமரங்கள் தொடக்கம் சகல பயிர்பச்சைகளும் கருகும். புல்மோட்டை நல்ல உதாரணம். மற்றது கடலரிப்பு நடக்கும். ஏற்கனவே ஒலுவில் துறைமுகம் கட்டியதால் இப்பிராந்தியம் படும்பாடு கொஞ்சநஞ்சமல்ல. எமது திருக்கோவில் முருகனாலயமும் பாதிக்கப்பட்டது. எனவே இன்னமும் நாம் பாதிக்கப்பட விரும்பவில்லை. இங்கு இல்மனைற் அகழவேண்டாம். அதைமீறிச்செய்யமுற்பட்டால் நாம் தீக்குளிப்போம் என உரக்ககத்தினர்.

பகல் 12 மணியளவில் பேச்சன் பின்னர் ஆய்வு வேலை நிறுத்தப்பட்டது. மக்கள் கலைந்தனர்.

இவ் இல்மனைற் அகழும் திட்டத்தின்கீழ் அம்பாறை கரையோரத்தில் 46 கி.மீற்றர் தூரம் ஒலுவில் தொடக்கம் உமிரி வரை இன்மனைற் அகழப்படவுள்ளது. அதன்முதற்கட்டமாக உமிரியில் 0.6 கி.மீற்றர் தூரம் அகழ்வதற்கான களவிஜயம் மூன்று நான்கு வருடங்களாக இடம்பெற்று வந்தது தெரிந்ததே.

தற்போது அரச நிருவாகத்தின் கீழுள்ள கோரைக்குறுப் தென்னந் தோட்டப் பகுதியில் இதனை ஆரம்பிக்க முயற்சி நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

(05)

## இளைஞர்களுடனான மு.காவின் ஒன்றுகூடல்





(பாறுக் ஷிஹான்)

முன்னாள் கல்முனை மாநகரசபை முதல்வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சர்வதேசவிவகாரப்பணிப்பாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை இரவு இளைஞர்களுடனான கலந்துரையாடல் அவரது இல்லத்தில் சாய்ந்தமருதில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய தலைவர் அல்-ஹாஜ் ரவூப் ஹக்கீம் கலந்து கொண்டதோடு மற்றும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ். தௌபீக், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெவ்வை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சாய்ந்தமருது அமைப்பாளர் எம்.ஐ.எம் பிர்தௌஸ், கல்முனை மாநகர சபை வேட்பாளர் எம்.எம்.பாமி ,ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உச்சபீட உறுப்பினர் ஏ.சி.சமால்டீன், சாய்ந்தமருது மத்திய குழு உறுப்பினர்கள் ஆகியோரும் பெருந்திரளான இளைஞர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (05)

## கல்முனை மாநகர உறுப்பினர்களுடன் மு.கா. தலைவர் ஹக்கீம் நேரில் சந்திப்பு



(எம்.என்.எம்.அப்ராஸ்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும், கட்சியின் பொருளாளருமான ரஹ்மத் மன்சூரின் கல்முனையில் அமைந்திருக்கும் அலுவலகத்தில் வைத்து முன்னாள் கல்முனை மாநகரசபை பிரதிமுதல்வர் காத்தமுத்து கணேஷ் மற்றும் முன்னாள்மாநகரசபைஉறுப்பினர்களான ஏ.ஆர்.செலஸ் றினா, என்.நந்தினி, ரீ.சுமித்ரா ஆகியோர் மற்றும்ஆர்.ப்ரகாஷ்,கே.நிறோஷன் ஆகியோரை திங்கட்கிழமை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது, கட்சியின்பிரதிச்செயலாளர்மன்சூர் ஏ.காதர், முன்னாள் மாகாணசபை அமைச்சரும் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை,கட்சியின் சர்வதேசவிவகார பணிப்பாளரும், முன்னாள் கல்முனை மாநகர முதல்வருமான சிறாஸ் மீராஸாஹிப், கட்சியின் அம்பாறை மாவட்ட செயற்குழுச் செயலாளர் ஏ.சீ.சமால்தீன்,கட்சிப்போராளிகள் மற்றும் நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

மேலும் இதன் போது ரஹ்மத் மன்சூரின் தாயாரும்,முன்னாள் வர்த்தக வாணிப கப்பல்துறை அமைச்சர்மர்ஹூம்கலாநிதிஏ.ஆர். மன்சூரின் பாரியார் சுஹறா மன்சூர் அவர்களையும் ரவூப் ஹக்கீம் சந்தித்து நலன் விசாரித்தார்.(05)



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# புள்ளிவிவரங்கள் கூறும் உண்மை

தொகைமதிப்புமற்றும்புள்ளிவிபரத்திணைக்களத்தின் அண்மைய தரவுகளின் பிரகாரம் கடந்த ஒரு தசாப்த காலப்பகுதியில்ஒருவர்தனது அடிப்படைத்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குத் தேவையான பணத்தின் பெறுமதி மூன்று மடங்காக உயர்வடைந்துள்ளது.

அதற்கமைய2012–2013காலப்பகுதியில்ஒருவர்தனது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு 5,223 ரூபாபோதுமானதுஎனமதிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும் இவ்வாண்டு ஜனவரி மாதம் அப்பெறுமதியானது 18,350 ரூபாவாக உயர்வடைந்துள்ளது. அதேபோன்று 2013 இல் 5,223 ரூபாவாகக் காணப்பட்ட இப்பெறுமதி 2016 இல் 6,117 ரூபாவாக அதிகரித்ததுடன் 2019 ஆம் ஆண்டு 6,966 ரூபாவாக மேலும் உயர்வடைந்தது.

அதேவேளை, 2022 ஆம் ஆண்டு நாட்டில் தீவிரமடைந்த பொருளாதார நெருக்கடியை அடுத்து பணவீக்கம் சடுதியாக பெருமளவால் அதிகரித்ததன் விளைவாக ஒருவர் அவரது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குத் தேவையான பணத்தின் பெறுமதி 15,970 ரூபாவாக மிகையான அளவினால் அதிகரித்தது.

மேலும் இப்பெறுமதி இவ்வாண்டு ஜனவரியில் 18,350 ரூபாவாக அதிகரித்துள்ளது. மே மாதத்தில் 17,608 ரூபாவாகச் சற்றுக் குறைந்துள்ளது என்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் தரவுகள் காண்பிக்கின்றன.

கடந்த இரண்டு வருடங்களில் நாட்டின் பொருளாதாரத்தை நிலைநிறுத்திவிட்டேன் இனி வளர்ச்சிப் பாதையில் செல்லவேண்டியதுதான் மிச்சமிருக்கும் பணி என்று அரசுத் தலைவர் மீண்டும் மீண்டும் மேடைகளில் உரத்து முழங்கி வந்தாலும் களத்தில், சாதாரண மக்கள் வாழ்க்கையில் எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை என்பதை இந்தப் புள்ளிவிவரங்கள் நன்கு எடுத்து இயம்புகின்றன.

அதேபோன்று, இந்தப் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்சக்கள் மட்டுமல்ல இடையில் அதிகாரத்தில் இருந்த ரணில் விக்கிரமசிங்கவும்கூட பொறுப்பாளி என்பதையும் இந்தப் புள்ளிவிவரங்கள் விளக்குகின்றன. 2015 முதல் 2019 வரை அரசியல் குழப்பங்களுடனேயே நாட்டை வழிநடத்திச் சென்ற மைத்திரி – ரணில் மோதலும் இந்த இழிவு நிலைக்குக் காரணம்.

ஆனால் தனது தவறுகளை எல்லாம் மறைத்து நாட்டின் மீட்பர் தானே என்கிற வகையில் ரணில் பரப்புரை செய்து வருகின்றார். இப்போது தன்னை மீண்டும் ஒரு 5 ஆண்டுகளுக்காவது பதவியில் இருத்தினால் நாட்டுக்குச் சுபீட்சத்தை தந்துவிடுவேன் என்கிற அவரது வாக்குறுதிகள் வெறும் கற்பனை வாதங்களே என்பதையே இந்தப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

2015இல் ரணில் அதிகாரத்தைப் பிடித்தபோதும் பொருளாதார நெருக்கடி பற்றி அவர் அதிகம் பேசினார். அதிலிருந்து நாட்டை மீட்கப் போராடுகின்றார் என்று தெரிவித்தார். ஆனால்தனதுபழையஅரசியல்பாணியில் இருந்து அவர் மாறவில்லை. தேர்தல் நெருங்கும்போது தனது பொருளாதாரச் சீர்திருத்தங்களை எல்லாம் தளர்த்தினார். இனிவரும் காலங்களிலும் அதிகார அவாவினால் அவர் அப்படி நடந்துகொள்ளமாட்டார் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது.

ரணில் தனது சாதனையாகக் குறிப்பிடும் ஒரு விடயத்திலேயே இவ்வளவு சறுக்கல்கள் இருக்கும்போது ஏனைய அரசியல் விடயங்களில் அவரின் வாக்குறுதிகள் நம்பக்கூடியனவே அல்ல.

# அந்தரங்கத்தைப் பணமாக்கும் சமூக ஊடகம்




**ரஃபியா ஜக்கரியா**

ஆண்டுகள் அதிகரிக்க அதிகரிக்க, சமூக ஊடகங்கள் வருவதற்கு முன்னால் உலகம் எப்படி இருந்தது என்பதே பலருக்கும் மறந்து வருகிறது.

அப்போதெல்லாம் வம்பளப்பதே மக்களுக்குச் செலவில்லாத பொழுதுபோக்காக இருந்தது. வாயாடிகள் சும்மா இருக்க முடியாமல், தங்களுடைய வீதியில் - சமூகத்தில் - வேலை செய்யும் இடத்தில், யார் - யாருடன் பேசுகிறார்கள், போகிறார்கள் என்பதையெல்லாம் - மிகவும் இரகசியமானதைப் பகிர்ந்துகொள்வதைப் போல - பேசுவார்கள்.

அதில்பாதிஉண்மையும்பாதிகற்பனையும்கலந்தே இருக்கும். கேட்பவர்களுக்கும்அதுதெரியும்என்றாலும் அதை அறிவதிலும் மேற்கொண்டு தங்களுக்குள் அதைக் கற்பனையில் மெருகேற்றுவதிலும் அலாதியானஃரகசிய கிளர்ச்சி இருந்தது என்பதே உண்மை. தங்களுடைய வாழ்க்கையை இன்னொருவருடைய வாழ்க்கையுடன் ஒப்பிட்டு, தங்களுக்கு இல்லாத குறை அல்லது வராத சோதனை அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது என்றால் அதில் ஏதோ தனக்கு வெற்றி ஏற்பட்டுவிட்டதைப் போன்ற சுபாவம் எல்லோருக்குமே இருக்கிறது.

## சமூக ஊடகங்களின் முதலீடு எது?

மனிதர்களின் இந்தப் பலவீனமான மனநிலையைத்தான் சமூக ஊடகங்கள் முதலீடாக வைத்து, காட்டுத்தீயென அவர்களுடைய உன்மத்தங்களைக் விசிறிவிட்டுக்கொண்டிருக்கின்றன. நமக்கிருப்பதாக நாமே நம்பிக்கொண்டிருக்கும் ஆற்றல்கள், தனிப்பட்ட அழகுகள் ஆகியவற்றை வெளிக்காட்டி நம்மை நாமே விலைபேசிவருகிறோம். லாகூரில் வசிக்கும் குடும்பப் பெண் முதல் டொரான்டோவில் வாழும் இளநங்கை வரை, தன்னைப் பற்றிய காட்சிப் பதிவுகளையும் அந்தரங்கத் தகவல்களையும் - எவரும் கேட்காமலேயே - வெளியிட்டு மகிழ்ச்சி அடைகின்றனர்.

அவர்கள் சொல்ல அல்லது காட்ட விரும்பும் தகவல்கள் மட்டுமல்ல, 'மற்றவையும்' சேர்ந்தே வெளியாவது குறித்துப் பலர் அறிந்திருக்கவில்லை, ஏனையோர் அதைப் பற்றிக் கவலைப்படுவதும் இல்லை. தங்களுடைய பதிவில் எதை வட்டமிட்டுக் காட்டுகிறார்கள், எதை ரசிக்கிறார்கள், எதற்கு உள்ளர்த்தத்துடன் விமர்சிக்கிறார்கள் என்பதைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. மாறாக - எத்தனை பேர் பார்த்தார்கள், விரும்பினார்கள் என்ற எண்ணிக்கைக்கே முக்கியத்துவம் தருகின்றனர்.

அடுத்தவர்களைப் பார்க்கும் அல்லது ரசிக்கும் மனிதர்களின் உள்மன ஆசையே ஒரு 'தொழிலாக' வடிவெடுத்து வளர்ந்துவிட்டது. இப்போது இதில் யார் அதிகம் பேரை ஈர்ப்பது என்பதில் வரம்பில்லா போட்டியும் அதிகரித்துவிட்டது. இதனால் கோடிக்கணக்கானவர்கள் சமூக ஊடகங்களைப் பார்ப்பதில், படிப்பதில் அடிமைகளாகிவிட்டனர். ஏராளமானோர் காலையில் தூக்கம் கலைந்து எழுந்தவுடனேயே பல்லைக்கூட துலக்காமல் அல்லது முகத்தைக்கூட கழுவாமல் கைப்பேசியை எடுத்து அதில் வந்துள்ள தகவல்களை, படங்களைப் பார்க்கத் தொடங்குகின்றனர்.

சமூக ஊடகங்களைப் பார்ப்பது பழைய வழக்கமாகிவிட்டாலும்அதில்விருப்பம்,விருப்பமின்மையைத் தெரிவிப்பதில் ஆர்வம் குறைந்துவிட்டபோதிலும் தங்களுடைய நட்பு வட்டத்திலும் உறவு வட்டத்திலும் யார் என்ன பதிவிட்டிருக்கிறார்கள் என்பதை உடனே தெரிந்துகொண்டுவிட வேண்டும் என்ற ஆர்வம் மட்டும் தலைதூக்கி நிற்கிறது. யார் இன்றைக்கு அழகாக உடுத்தியிருக்கிறார்கள், ஒப்பனை செய்திருக்கிறார்கள், மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று பார்க்கிறார்கள். யாருடைய பதிவு வரவில்லை என்பதையும் உடன் கவனிக்கத் தயங்குவதில்லை, காரணம் - பதிவிடாதவர்களுக்கு ஏதோ துயரம் அல்லது சம்பவம் நடந்திருக்கும் என்ற ஊகம்தான்.

சுருக்கமாகச் சொல்வதென்றால், சமூக ஊடக வாசிப்பு என்பது அன்றாடம் செய்தாக வேண்டிய கடமைகளில் ஒன்றாகிவிட்டது. அதிலும் குறிப்பாக, அடுத்தவர்களுடைய அந்தரங்கத்தைப் பார்ப்பதில் பேரவா ஏற்பட்டுவிட்டது. தெரிந்தவர்கள் மட்டுமல்ல தெரியாதவர்களுடைய வாழ்க்கை விவரங்களும்கூட அதே ஆர்வத்துடன்தான் பார்க்கப்படுகின்றன.

ஒருவருடைய பதிவு நல்லதா கெட்டதா என்பதுகூட இரண்டாம்பட்சமாகிவிட்டது; அதை எத்தனை பேர் பார்க்கின்றனர், எத்தனை பேர் எப்படியெல்லாம் விமர்சிக்கின்றனர் என்று பார்த்து, அதிக வரவேற்பு என்றால் பொறாமைப்படுவது அல்லது வாய்விட்டுப் பாராட்டுவது என்ற நிலைக்குச் சென்றுவிட்டது.

## பிரபலம் எனும் பசி

சமூக ஊடகங்கள் வளர வளர, தகவல்களைத் தெரிந்துகொள்ளும் பசியும் பெருத்துவிட்டது. உங்களுடைய நண்பர் கல்லூரியில் இன்று என்ன செய்தார், டென்மார்க்கில் இருக்கும் உறவுக்காரர் என்ன செய்கிறார் என்று சாதாரணத் தகவல்களைத் தெரிந்துகொண்ட காலம் மலையேறிவிட்டது. இப்படிப் பார்ப்பவர்களின் தேவை அறிந்து, 'தொழில்முறை'யாகவே காட்சிகளைப் பதிவேற்றுகிறவர்கள் அதற்கேற்ற ஆட்கள் - சாதனங்கள் - கருப்பொருள்களுடன் களமிறங்கிவிட்டார்கள்.

யூட்யூபர்களும் டிக்-டாக்கர்களும் சமூக ஊடக ரசிகர்களின் வாழ்க்கையை ஆக்கிரமித்துவிட்டார்கள். ரசிகர்களை ஈர்க்கும் அல்காரிதம்கள் வலிமையடைந்துவிட்டன. கடையில் என்ன வாங்கினேன், வெளியில் என்ன சாப்பிட்டேன், நண்பனுடன் எப்படி - எதற்காக சண்டையிட்டேன், எப்படி பிறகு சமாதானமானேன் என்று - ஆயிரக்கணக்கான பேர் பார்க்க - பதிவிடுகிறார்கள்.

இவர்களில் பலர் காதலியுடன், மனைவியுடன் நெருக்கமாக இருக்கும் காட்சிகளைக்கூட கூச்சமில்லாமல் காட்டுகிறார்கள் - அது மற்றவர்களுக்கும் பார்க்கப் பார்க்க பரவசம் அளிக்கும் என்ற பாவனையில். இவற்றைப் பார்த்தாவது மேலும் மேலும் தங்களுக்கு ரசிகர் கூட்டம் பெருகட்டும் என்ற நோக்கத்திலும் இதைச் செய்கின்றனர்.

யூட்யூபராகவோ டிக்-டாக்கராகவோ ஆகிவிட வேண்டும் என்று பல பாகிஸ்தானியர்கள் விரும்புகிறார்கள். இதற்குக் காரணம், ஆதிகாலத்திலிருந்தே இப்படிப்பட்ட வம்புகளை விரும்பும் சமூகமாக இருப்பது மட்டுமல்ல, சிலருக்கு இதன் மூலம் கைச் செலவுக்குப் பணமும் கிடைக்கிறது.

டாலர்கள் கணக்கில் மிகக் குறைவுதான் என்றாலும் பாகிஸ்தானிய ரூபாய் கணக்கில் கணிசமாக இருப்பதாலும், இதற்கெல்லாம் வரி போட முடியாது என்பதாலும் ஆர்வமாகப் பதிவிடுகிறார்கள். அக்கம் பக்கத்தில் இல்லாவிட்டாலும் சமூக ஊடக வட்டாரத்தில் பிரபலமாகிவிட முடிகிறது என்பதாலும் பலரும் இதை விரும்புகின்றனர்.

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# அந்தரங்கத்தைப் பணமாக்கும் சமூக ஊடகம்

4ம் பக்க தொடர்ச்சி...........

### அந்தரங்கமா? வணிகமா?

இதில் வியப்பு என்னவென்றால், ஏற்கெனவே வெவ்வேறு துறைகளில் புகழ் சம்பாதித்துவிட்ட பலரும் அவர்களுடைய வழித்தோன்றல்களும்கூட இதில் இறங்கியிருப்பதுதான். இந்தப் பிரபலங்களும்கூட தங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையை இதன் மூலம் பிரபலப்படுத்திக்கொள்வதுடன் மற்ற பிரபலங்களுடன் சேர்ந்து 'அயல் மகரந்த சேர்க்கை'யிலும் ஈடுபடுகின்றனர்.

இவர்கள்தான் இப்படி என்றால், இதை தினமும் கவனித்து கருத்து பதிவிடும் ஆர்வலர்களும் அதிகமாக இருக்கின்றனர். இந்தப் பதிவுகளைப் பார்ப்பவர்கள் எண்ணிக்கை அதிகம் என்றாலும் பெரும்பாலானவர்கள் இதை விரும்புவதில்லை என்பதை அவர்களுடைய கருத்துகளிலிருந்து எப்போதுதான் இவர்கள் உணர்ந்துகொள்வார்கள் என்று தெரியவில்லை.

பதிவை வெளியிட்டுவிட்டு, 'என்னை ஏன் யாரும் பார்க்கவுமில்லை கருத்தும் தெரிவிக்கவில்லை' என்று மண்டையை உடைத்துக்கொண்டவர்கள் இப்போது தங்களுடைய அந்தரங்கத்தைக்கூட பகிர்ந்துகொள்வதாகவே தெரிகிறது. அதையும்கூட மிகச் சிலர்தான், பார்த்த பிறகு விமர்சனங்களைப் பதிவிடுகின்றனர். இப்படித் தன்னையே விலைபேசி காட்சிப்படுத்துவது அவசியமா என்று பதிவிடுவோர் சிந்திக்க வேண்டும்.

மனதை அடக்கத்தெரியாதவர்கள்தான் இப்படிக்காட்சிகளைப் பதிவிடுகிறார்கள் என்றால், அதேபோல சுய கட்டுப்பாடு இல்லாதவர்கள்தான் தினசரி இந்தக் காட்சிகளையெல்லாம் தேடித்தேடி பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இது ஒரு வினோதமான மனப் பிறழ்வுதான். வெறும் வம்புப் பேச்சாக இருந்த பழக்கம் இப்போது விபரீதமாக மாறிக்கொண்டிருக்கிறது.

இது நமக்கு அவசியமா, இது எந்த வகையில் நமக்குப் பயன்படப்போகிறது என்று ஒவ்வொருவரும் தங்களையே கேட்டுக்கொள்ளவேண்டும். அடுத்தமுறை பொழுதுபோக்குக்காக இப்படி இன்னொருவருடைய அந்தரங்கத்தைப் பார்க்க முற்படும்போது, இதன்பின்னால் உள்ள வணிகநோக்கத்தையும் நினைவில் கொள்வது நல்லது.

© த டான்

# வனஜீவராசிகள் திணைக்கள காணி இந்து மயானத்துக்காக விடுவிப்பு



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பாலம்போட்டாறு கிராம சேவகர் பிரிவின் பத்தினிபுர கிராம மக்களுக்கான இந்து மயானத்துக்கான காணி கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமானால் திங்கட்கிழமை மாலை உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.



குறித்த நிகழ்வு பத்தினிபுர கிராமத்தில் வைத்து மக்களிடத்தில் உரிய ஆவணம் உடன் கையளிக்கப்பட்டது. சுமார் 25 வருடகாலமாக இந்து மயானம் இன்றி வாழ்ந்த மக்களுக்காக தற்போது வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு சொந்தமான கல்மெடியாவ வடக்கு கிராம சேவகர் பிரிவில் உள்ள காணியே இந்து மயானத்துக்காக ஒப்படைக்கப்பட்டது.

இதில் தம்பலகாமம் பிரதேச சபை செயலாளர் உட்பட பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டதுடன். நீண்ட காலமாக நிலவிய இந்து மயான பிரச்சினைக்கு பத்து நாள்களுக்குள் தீர்வு பெற்று தந்த கிழக்கு மாகாண ஆளுனருக்கு மக்கள் நன்றிகளையும் தெரிவித்தனர்.

இதன் போது திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவில் உள்ள முத்து நகர் கிராம மக்களும் தங்கள் வயல் நில குடியிருப்பு பகுதிகளை இலங்கை துறைமுக அதிகார சபையினர் கையகப்படுத்த முயற்சிப்பதாகவும் ஆளுனரிடம் மக்கள் சுட்டிக்காட்டினர். இது தொடர்பில் உரிய சாதகமான நடவடிக்கை எடுப்பதாக மக்களிடத்தில் ஆளுனர் உறுதியளித்தார். (05)





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee
Chikne Fried Rice with
Vegetable
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cococola M - 70/=
Pepsi M - 70/=
Swabpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# கற்பிட்டி அல் அக்ஸா புதிய அதிபராக அமீர்



(எம் சியாஜ்)

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் புதிய அதிபராக இலங்கை அதிபர் சேவை தரம் 1 இன்கெக்குனுகொள்ளயைச்சேர்ந்த யூ.எம்.எம் அமீர் திங்கட்கிழமை தமது கடமையை கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

மேற்படி நிகழ்வு கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் அதிபராக கடமையாற்றிய எம்.என். எம் நஸ்றீன் தலைமையில் நடைபெற்றது.

இதில் கற்பிட்டி கோட்டக் கல்வி பணிப்பாளர் ஏ.எம் ஜவாத்,





அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள்,நலன்விரும்பிகள் பாடசாலை அபிவிருத்திக் குழு, பழைய மாணவர் சங்கம் மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (05)

# தாய்லாந்தில் தங்கம் வென்ற சுதாகரனுக்கு கிழக்கிலிருந்து நேரில் சென்று வாழ்த்துக்கள்





( வி.ரி. சகாதேவராஜா)

தாய்லாந்தில் நடைபெற்ற பெரு விளையாட்டின் போது இலங்கையில் இருந்து சென்று தங்கம் வென்ற



கம்பளையைச் சேர்ந்த கணேசன் சுதாகரனுக்கு கிழக்கில் இருந்து நேரடியாக சென்ற ஆசிரியர் குழுவினர் வாழ்த்து தெரிவித்தனர்.

தாய்லாந்தில் நடைபெற்ற ஆசிய 'ரிஆர்' போட்டியில் மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்துக்குட்பட்ட கம்பளையைச் சேர்ந்த கணேசன் சுதாகரன் தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

கம்பளையைச் சேர்ந்த அதிபர்களான கணேசன் புவனேஸ்வரி தம்பதியினரின் இரண்டாவது புத்திரன் சுதாகரன் ஈட்டிய கடல் கடந்த தெற்காசிய சாதனை தொடர்பாக பாராட்டுமழைபொழிந்துகொண்டிருக்கிறது.

இந்த சர்வதேச சாதனை காரணமாக இலங்கை வான்படையில் அவருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது.

அந்த வகையில் சுதாகரனின் தந்தை தங்கையா கணேசன் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் 1991ஃ92 காலப் பகுதியில்விஞ்ஞானபயிற்சிஆசிரியராக இருந்தவர். தற்பொழுது புஸ்ஸல்லாவ சரஸ்வதி மகா வித்தியாலய அதிபராக இருக்கிறார். அவரது புதல்வரின் இந்த சர்வதேச சாதனையை பாராட்டு முகமாக மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையின் 91/ 92 அணியினர் புலன அணித் தலைவர் வி.ரி.சகாதேவராஜா தலைமையில் கடந்த சனிக்கிழமை கம்பளைக்கு சென்று அவரது இல்லத்தில் பாராட்டை நிகழ்த்தினர்.வாழ்த்தினர்.

அதன் போது அவர்களது குடும்பத்தினரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

## 36 பேர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தப்பட்டது.

திலித் ஜயவீர சார்பில் கலாநிதி ஜீ.வீரசிங்க கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளார்.

## நாகப்பட்டினத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கைகள்அமைக்கப்பட்டுள்ளன. பயணி ஒருவருக்கு 5 ஆயிரம் இந்திய ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படவுள்ளது, வணிக வகுப்பில்27இருக்கைகள்அமைக்கப் பட்டுள்ளன.

இதில் பயணிக்க ஒருவருக்கு 7,500 இந்திய ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படவுள்ளதாக கூறப்பட்டுள்ளது. அத்துடன் இந்த கப்பலில் பயணிகளுக்கு துரித உணவுகளை கட்டணத்துடன் பெற்றுக்கொள்ளும்வசதியும்ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒருவர் தம்முடன் 60 கிலோ வரையான பொதியை எடுத்துச் செல்லவும் 5 கிலோ வரை கைப்பையில் எடுத்துச் செல்லவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பயணச்சீட்டுக்களுக்கான முன்பதிவுகள் ஏற்கனவே தொடங்கப்பட்டு இடம்பெற்று வருகின்றன.

## மாகாண ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றி பெறும் பட்சத்தில் உடனடியாக மாகாண சபை அதிகாரப் பகிர்வை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன்.

இவ்வாறு தெரிவித்தார் எதிர்க் கட்சித் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாச. நேற்றுக் கொழும்பில் தன்னை நேரில் சந்தித்துப் பேசிய ரெலோ தலைவர்செல்வம்அடைக்கலநாதன், பொதுச்செயலாளர்ஜனாஎனப்படும் கோவிந்தன் கருணாகரம், கட்சியின் பேச்சாளர் சுரேந்திரன் குருசாமி மற்றும் புளொட் தலைவர் சித்தார்த்தன் ஆகியோரிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புக் குறித்து ரெலோ விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவின்அழைப்பையேற்று அவரை இன்று காலை 7.30 மணியளவில் எதிர்க்கட்சி அலுலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் சஜித் பிரேமதாஸவும், ஐக்கிய மக்கள் சக்தியின் வடக்கு மாகாண பிரதம அமைப்பாளர் உமாசந்திரா பிரகாஷும் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில்தமிழ்த்தேசியப்பொதுக் கட்டமைப்பு பொது வேட்பாளரைக் களமிறக்கியுள்ள நிலையிலேயே அந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும்ஐக்கியமக்கள்சக்தியின் வேட்பாளரான சஜித் பிரேமதாஸ, தமிழ்த்தேசியபொதுக்கட்டமைப்பின் உறுப்பினர்களைச்சந்திப்பதற்கான அழைப்பைத் தனித்தனியாக அரசியல் கட்சிகளுக்கும் பொது அமைப்புகளைச் சார்ந்த பிரதிநிதிகளுக்கும் விடுத்திருந்தார்.

இந்த அடிப்படையிலேயே மேற்குறிப்பிட்ட அரசியல் கட்சிகள் தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமான தங்களுடைய நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவும், சஜித் பிரேமதாஸ, தமிழ்மக்களினுடைய அரசியல் அபிலாஷைகளைத் தீர்ப்பதற்காக முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகளைப் பற்றி தெரிந்துகொள்வதற்காகவுமே இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

இந்தச்சந்திப்பில் பிரதானமாக தமிழ் மக்களினுடைய அரசியல் அபிலாஷைகளைத் தீர்க்கும் முகமான சமஷ்டி முறையான அரசியல் தீர்வு தொடர்ந்தும் எட்டப்படாமல் இருப்பதனாலேயே தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற முடிவு வலுப் பெற்றது என்பது தெளிவுபடுத்தப்பட்டது.

இதுவரை காலமும்தான் இந்த நாட்டின் ஜனாதிபதியாகவோ அல்லது பிரதம மந்திரியாகவோ பதவி வகிக்கக்கூடிய சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்றும், இம்முறை அந்தச் சந்தர்ப்பம் வழங்கப்படும் பட்சத்தில் நிச்சயமாக தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தான் முடிவு காண்பார்என்றும்சஜித்பிரேமதாஸ தெரிவித்தார். ஆகவே, கடந்த கால கசப்பான நிகழ்வுகளை மனதில் வைத்துக்கொண்டு தன்னையும் அந்த வேட்பாளர்களோடு அல்லது பதவிகளைப் பெற்றுக்கொண்டவர்களோடு ஒப்பிடவேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் ஜனாதிபதி வேட்பாளராகப்போட்டியிடுவதற்குச் சகல உரிமைகளும் இருக்கின்றன என்றும், அதைத்தான்மதிக்கின்றார் என்றும் தெரிவித்த அவர், தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற நிலைப்பாட்டை மதிக்கின்றார் என்றும் கூறினார். ஆனாலும் தேசிய ரீதியான தேர்தலில் இன, மொழி, மதமற்றும்பிரதேசரீதியான அடையாளத்தோடு வேட்பாளர்கள் முன்னிலைப்படுத்தப்படுவது ஒற்றுமையைச் சீர்குலைக்கலாம் என்றும் கருத்துத் தெரிவித்தார். அவரைப் பொறுத்தவரை முதல் கட்டமாக பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் ஊடாகக் கொண்டுவரப்பட்ட மாகாண சபைக்கட்டமைப்பைமுழுமையாக நடைமுறைப்படுத்துவதற்குத் தான் தயாராகவுள்ளேன் என்று தெரிவித்தார். அதற்காகத் தான் வெளிப் படையாகவும் பேசி வருகின்றார் என்றும், யாருக்கும் பயந்து சாக்குப்போக்குகளைச் சொல்வது இல்லை என்றும் தெரிவித்தார். இவ்விடயத்தில் தான் உறுதியாக இருக்கின்றார் என்றும், ஜனாதிபதியாக வெற்றி பெறும் பட்சத்தில்உடனடியாகமாகாணசபை அதிகாரப் பகிர்வை முழுமையாக நடைமுறைப்படுத்துவார் என்றும் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, எஞ்சியுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு மற்றும் நில அபகரிப்பைத் தடுப்பது, தமிழ் இளைஞர்கள், யுவதிகள் நீதியற்ற முறையில் கைது செய்யப்படுவது, விசாரணை என்ற போர்வையில் பயங்கரவாதத்தடுப்புப்பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் அச்சுறுத்தல் நடவடிக்கையை நிறுத்துதல்,இந்தியமீனவர்களுடைய அத்துமீறலினால்எமது மீனவர்கள் படுகின்ற துன்பம் உட்பட பல விடயங்கள் தீர்க்கப்படவேண்டும் என்று அரசியல் கட்சியினர் வலியுறுத்தினர்.

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் இப்படியான பிரச்சினைகளுக்குத் தான் சிறப்புப் பணிக் குழுக்களை அமைத்து தனது நேரடி மேற்பார்வையின் கீழ் தீர்வைப் பெற்றுக் கொடுப்பார் என்றும் அவர் உறுதியளித்தார்.

தான் இலங்கையில் உள்ள அனைத்து இனங்களையும் அனைத்து மதங்களையும் நேசிப்பவன் என்றும், தான் ஒரு இனவாதி அல்ல என்பதையும் தமிழ் மக்கள் கருத்தில்கொள்ள வேண்டும்என்றும், ஆகவே வரும் ஜனாதிபதித் தேர்தலிலே தனக்கான ஒத்துழைப்பை நல்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அவருடைய கருத்துக்களைப் பரிசீலித்து மற்றவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் எங்கள் நிலைப்பாட்டை மீண்டும் தெளிவுபடுத்துவதாகக் கட்சியினர் தெரிவித்தனர் - என்றுள்ளது.

## போதைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாறு கேட்டுக்கொண்டார்.

இந்த கட்டளை மையம் பொது ஒழுங்கு முகாமைத்துவம் மற்றும் மோட்டார் சைக்கிள் குழுவில் பிரதான மையமாக செயல்படும்.

பயங்கரவாத மற்றும் வன்முறை, தீவிரவாத தாக்குதல்கள், வன்முறைஏற்படுத்தும்எதிர்ப்புகள், பணயக்கைதிகள் தொடர்பான விடயங்கள் மற்றும் ஏனைய நெருக்கடிகள் உட்பட பல்வேறு அவசரநிலைகளை கையாளும் பொறுப்பு இந்தப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

பாதாள உலகக் குழுகளுக்கோ அல்லது போதைப்பொருள் கடத்தல் காரர்களுக்கோ நாட்டை அழிக்க இடமளிக்க முடியாது என வலியுறுத்திய ஜனாதிபதி, இலங்கையில்பாதாளஉலகசெயற்பாடுகளுக்கு எதிராக புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி புதிய சட்டங்கள் கொண்டு வரப்படும்.

அத்துடன், நாட்டு மக்களைச் சட்டம் ஒழுங்கின் கீழ் வாழ அனுமதிப்பது மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை. அதனைச் சட்டத்தில் உள்ளடக்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

நாட்டுமக்களைசட்டம்ஒழுங்கின் கீழ் வாழ இடமளிப்பது அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதாகும் என்தைக் கூறவேண்டும். அதை சட்டத்தில் சேர்க்கவும் நாம் எதிர்பார்க்கிறோம்.

அடுத்த மாதத்தில், உங்களுக்கு இன்னொரு பெரும் பணியொன்று உள்ளது. ஜனாதிபதி தேர்தல் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது. நாட்டில் சட்டம் ஒழுங்கைநிலைநாட்டி,இத்தேர்தலை சட்டரீதியாக நடத்த வாய்ப்பளிப்பது பொலிஸ் திணைக்களத்தின் கடமையாகும். ஜனாதிபதி என்ற வகையில் எனதும் தேர்தல் ஆணைக்குழு மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் கடமையும் ஆகும்.

அதுமாத்திரமன்றி, தேர்தலுக்குப் பின்னரும் வன்முறைச் செயல்கள் நடப்பதற்கு இடமளிக்க முடியாது. நாம் அவற்றை நிறுத்த வேண்டும். இந்தத் தேர்தலுக்குப் பிறகு எந்த வகையிலும் வன்முறைகள் நடைபெறக்கூடாது. அது குறித்து நாம் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டில்சட்டம்ஒழுங்குபேணப்பட்டதாலேயேஇன்றுஇந்தத்தேர்தலை நடத்த முடிந்துள்ளது. நமது அரசமைப்புபாதுகாக்கப்பட்டுள்ளதால், நாம்அரசமைப்பின்பிரகாரமேபுதிய ஆளும்தரப்பை நிறுவுகிறோம்.

1931 ஆம் ஆண்டு முதல் இலங்கை மாத்திரமே சர்வசன வாக்குரிமை மற்றும் ஜனநாயகத்தைதொடர்ச்சியாகநடைமுறைப் படுத்தியுள்ளது. மனிதஉரிமைமீறல் உட்பட வேறு குற்றச்சாட்டுகளும் உள்ளன. ஆனால் இலங்கை மாத்திரமே இந்த ஜனநாயக முறையைத் தொடர்கிறது. இந்த பொறிமுறையை நாம் பாதுகாக்க வேண்டும்.

அதைஒருபோதும்மீறஇடமளிக்கக்கூடாது. அரசியல் கட்சிகளுக்கு இடையேஎவ்வளவுபிரச்சினைகள் இருந்தாலும்தேர்தல்முடிவுகளுக்கு பிறகு வெற்றி தோல்வியை ஏற்று, வெற்றிபெற்றவரிடம்ஆட்சிகைமாற்றப்படுகிறது. இந்த சூழ்நிலையால் தான் இது சாத்தியமாகின்றது.

ஆனால்இரண்டுஆண்டுகளுக்கு முன்பு இந்த நாட்டின் ஆளும்தரப்பு கவிழும் நிலை காணப்பட்டது. ஜனாதிபதி அலுவலகம், ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை ஆகியவற்றை ஆக்கிரமித்து, பிரதமரின் தனிப்பட்ட இல்லத்திற்கு தீ வைத்து, பிரதமர்அலுவலகத்தையும் ஆக்கிரமித்து, நாடாளுமன்றத்தை கைப்பற்றவும்ஆர்ப்பாட்டக்காரர்கள் முயன்றனர்.

ஆனால் எமது இராணுவம் உட்பட சட்டத்தைப் பாதுகாக்கும் அனைவரும் மேற்கொண்ட நடவடிக்கைகளினால் அன்றைய தினம் பாராளுமன்றத்தைக் கைப்பற்றுவதைத்தடுக்க முடிந்தது. நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும், வங்குரோத்து நிலையில் இருந்து காப்பாற்றவும் நான்அரசாங்கத்தைபொறுப்பேற்று தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளேன்.

அதனால் இன்று நாட்டில் தேர்தலை நடத்த முடிந்துள்ளது. அதற்காக நாம் பெருமைப்பட வேண்டும். ஆனால் இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் என்ன நடந்திருக்கும்?

அன்றுநாம்எடுத்தநடவடிக்கைகளால்தான் இன்று இந்தத் தேர்தலை நடத்த முடிந்துள்ளது. இன்று பங்களாதேஷ் அரசாங்கம் வீழ்த்தப்பட்டுள்ளது. ஆட்சியைப் பொறுப்பேற்க யாரும் முன்வரவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொல்லப்படுகின்றனர்.

பாதுகாப்பு செயலாளர், பிரதம நீதியரசர் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் ஆகியோரை நாட்டை விட்டு வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. ஹோட்டல்களுக்குத் தீ வைத்து அழிக்கப்பட்டுள்ளன. அந்த நாட்டில் இன்னும் இயல்பு நிலை திரும்பவில்லை.

ஆனால், எமது நாட்டின் பாதுகாப்புப் படையினர் என்ற வகையில் நீங்கள் எடுத்த நடவடிக்கைகளால் நாங்கள் அந்த நிலையிலிருந்துகாப்பாற்றப்பட்டோம். தற்போது செப்டெம்பர் 21இந்நாட்டு மக்கள் தாங்கள் விரும்பும் வேட்பாளருக்கு வாக்களிக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

நாட்டில் சட்டம் ஒழுங்கை எல்லா நேரங்களிலும் நாங்கள் பாதுகாத்தோம். எனது நண்பர் முஹம்மது யூனுஸ் அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பங்களாதேஷில் சட்டம் ஒழுங்கு விரைவில் நிலைநாட்டப்பட வேண்டும்என்றுபிரார்த்திக்கிறேன். அதை ஒருபோதும் விட்டுவிடக் கூடாது.

இந்த நாட்டின் அடிப்படை உரிமைஜனநாயகம். அதேபோன்று அரசாங்கத்தின் இருப்புமாகும். சட்டரீதியான அரசாங்கம் ஒன்று இருக்கின்றது என்றால், அந்த அரசாங்கத்தைப் பாதுகாக்க வேண்டும். நான் அதை 1970 இல் கற்றுக்கொண்டேன். ஐக்கிய தேசியக்கட்சி அன்று எதிர்க்கட்சியில் செயற்பட்டது.

மக்கள்விடுதலைமுன்னணியின் கிளர்ச்சியின் போது எதிர்க்கட்சித் தலைவராக ஜே.ஆர் ஜயவர்தன, 'எங்களுக்கு இந்த அரசாங்கம் பிடிக்கவில்லை. இந்த அரசை தூக்கி எறிய வேண்டும். ஆனால் நாம் அதை ஜனநாயகக் கட்டமைப்பில் செய்ய வேண்டும்' அதேபோன்று, "இதுஜனநாயகத்துக்குஅச்சுறுத்தல்" எனவே பண்டாரநாயக்காவின் அரசாங்கத்திற்கு நான் பூரண ஆதரவை வழங்குகின்றேன். இது எனக்கு விருப்பமான அரசாங்கமாக இல்லாவிட்டாலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம்'என்று அவர் கூறினார். அன்றிலிருந்து இன்று வரை எங்களிடம் அந்த கட்டமைப்பு உள்ளது.

1989 ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்க மற்றும் அனுருத்த ரத்வத்த ஆகியோர் ஜனாதிபதி பிரேமதாசவைச் சந்தித்து 'எங்களுடைய முழு ஆதரவையும் உங்களுக்குவழங்குகிறோம்'என்று அறிவித்தனர். அதுதான் நமது வரலாறு.

நீங்கள் 2022 ஜூலை மாதம் இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டியதினால், 2024 செப்டெம்பர் 21, ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க இந்த நாட்டு மக்கள் தங்கள் வாக்குகளைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளனர். அதற்காக உங்கள் அனைவருக்கும் நான் நன்றி தெரிவிக்கிறேன் என்றார்



## கிளிநொச்சியில் வைகறை நிகழ்ச்சி

சமூகத்தில் நலிவடைந்தவர்களை உள சமூக ஆதரவின் ஊடாக வலுப்படுத் துவதற்கான வைகறை நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் திங்கட்கிழமை நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் தலைமையில், கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

குறித்த நிகழ்ச்சித் திட்டத்துடன் சம்பந்தப்படட அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டதுடன், அவர்களது கருத்துக்கள் தொடர்பில் இதன்போதுகலந்துரையாடப்பட்டன.

மேலும் குறித்த திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் வழி வகைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

முதற்கட்டமாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவின் வேம்படி கேணி கிராமம், பூநகரி பிரதேச செயலர்பிரிவின்நாச்சிக்குடாகிராமம் ஆகியன மாதிரிக் கிராமங்களாக தெரிவு செய்யப்பட்டு திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர்(காணி) இ.நளாஜினி,பயர்மெட்நிறுவனத்தின் இலங்கைக்கான இணைப்பாளர் வைத்தியர் நயனி சூரியாராச்சி, பயர்மெட் நிறுவனத்தின் உள சமூக ஒருங்கிணைப்பாளர் ஆர்.றொனி, கிளிநொச்சி மாவட்ட பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் யாழவன், உளநலவைத்தியர்ஜெயராசா,பளை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி, பூநகரி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக கணக்காளர், மாவட்ட செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், உளவள ஆற்றுப்படுத்துனர், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (05)

## ஏறாவூரில் கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் படுகொலை

### சந்தேகநபர் கைது

மட்டக்களப்பு, ஏறாவூர் மிச்சிநகர் பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய நபரொருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்த சம்பவம் தொடர்பில் சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலைச் சம்பவம் கடந்த 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இந்த கொலைச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஏறாவூர் பொலிஸார், சந்தேக நபரை திங்கட்கிழமை காலை கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் ஏறாவூர் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடையவர் ஆவார்.

இதேவேளை, கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் ஏ.டி.எம். அட்டையை திருடி பணமோசடியில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.(05)



காலைக்கதிர் Kalaikkathir

# 40 ஆயிரம் கஞ்சா செடிகள் மாட்டின மொனராகலையில் இருவர் கைது

மொனராகலை, ஹம்பேகமுவ பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் கஞ்சா செடிகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் திங்கட்கிழமை பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொனராகலை, தனமல்வில பிரதேசத்தில் வசிக்கும் 37 மற்றும் 44 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 40 ஆயிரம் கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக ஹம்பேகமுவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹம்பேகமுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# ஐஸ் போதைப்பொருள் சிக்கியது பிலியந்தலையில் ஒருவர் கைது

பிலியந்தலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரகதி மாவத்தை சந்தியில் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பிலியந்தலை பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடையவர் ஆவார்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 12 கிராம் 660 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக பிலியந்தலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பிலியந்தலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# மூன்று ஆயிரம் மெற்றிக் தொன் இஞ்சியை இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதி

இஞ்சியை இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

எதிர்வரும் மூன்று மாதங்களில் 3,000 மெற்றிக் தொன் இஞ்சியை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.(05)

## தனமல்வில்லயில் மாணவி துஷ்பிரயோகம்

# சிறுவர் நன்னடத்தை பராமரிப்புப் பிரிவில் கைதான மாணவர்கள் 14 பேரும் அடைப்பு

மொனராகலை, தனமல்வில பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவி ஒருவரைப் பலமுறை பாலியல் துஷ்பிரயோகம் செய்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 14 மாணவர்களை சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு நிலையத்தில் தடுத்து வைக்க வெல்லவாய நீதவான் நீதிமன்றம் திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், ஏனைய சந்தேக நபர்களான மூன்று மாணவர்களையும் பெண்ணொருவரையும் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

11 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் 16 வயதுடைய மாணவியொருவரே இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாகியுள்ளார்.

சந்தேக நபர்களான 17 மாணவர்களும் சுமார் ஒரு வருட காலமாக ஏழு முறை இந்த மாணவியை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

# இரு மாணவர் குழுக்கள் இடையே அ'புரம் பாடசாலையில் தகராறு

அநுராதபுரம் நகரத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் இரு மாணவ குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறில் மாணவன் ஒருவனின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


காயமடைந்த மாணவன் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த தகராறுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் நான்கு மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# மீன் ஏற்றிச் செல்லும் வண்டி இ.போ.ச. பஸ் மோதி விபத்து





(பாறுக் ஷிஹான்)

மீன் ஏற்றிச் செல்லும் வண்டி மற்றும் இ.போ.சபைக்கு சொந்தமான பேரூந்து மோதியதில் விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்து நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாண்டிருப்பு மகா வித்தியாலயத்திற்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தின் போது கல்முனை மட்டக்களப்பு பிரதான வீதி வழியே அக்கரைப்பற்று பகுதியில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த இ.போ.சபைக்கு சொந்தமான பேரூந்தும் மட்டக்களப்பு கல்முனை வீதி வழியாக வந்த சிறிய ரக மீன் ஏற்றிச் செல்லும் வண்டியும் இந்த விபத்தில் சிக்கிக்கொண்டுள்ளதுடன் பேருந்து பகுதி அளவில் சேதமடைந்துள்ளது.

இதன் போது இவ்விரு வாகனத்தினையும் செலுத்தி சென்ற சாரதிகள் காயமடைந்த நிலையில் அருகில் உள்ள வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் விபத்து இடம்பெற்ற வேளை மழை அப்பகுதியில் பெய்து கொண்டிருந்ததாகவும் வளைந்து செல்லும் பிரதான வீதியில் சிறிய ரக மீன் ஏற்றிச் செல்லும் வண்டி வேகக் கட்டுப்பாட்டை மீறி பயணித்த வேளை இவ்விபத்து இடம்பெற்றதாக நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டனர்.(05)

# சமூக நலன்களை முன்னிறுத்தியே மக்கள் காங்கிரஸ் முடிவெடுக்கும்

## மக்கள் சந்திப்பில் தலைவர் ரிஷாத் உறுதி

(எஸ்.அஷ்ரப்கான்)

சமூகங்களின் நலனை முன்னிறுத்தியே அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பொருத்தமான முடிவொன்றை மேற்கொள்ளுமென மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

'ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளருக்கு ஆதரவு வழங்க வேண்டும்?' என்பது தொடர்பில், கடந்த 10,11,12 ஆகிய தினங்களில் வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற, மக்களின் கருத்துக்களைக் கேட்டறியும் கலந்துரையாடல்களின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர் -

'தலைமையுடன் நட்பையும் உறவுகளையும்





கொண்டிருப்பதைக் காரணமாக வைத்துள்ளதவொரு ஜனாதிபதி வேட்பாளருக்கும் ஆதரவு வழங்க முடியாது. சுமார் நான்கரை வருடகால ஆட்சியில் நமது சமூகம் எதிர்கொண்ட இன்னல்களை நாம் மறந்துவிட முடியாது. அதேபோன்று, எதிர்க்கட்சியில் நாம் இருந்தவேளை, கட்சியின் ஆதரவாளர்களுக்கும் தலைமைக்கும் ஏற்படுத்திய துன்பங்கள் மறக்கமுடியாதவை.

கொழும்பிலே தலைமையும் கட்சியும் முடிவெடுத்த பின்னர், மக்களிடம் வந்து 'இந்த வேட்பாளரைத்தான் ஆதரியுங்கள்' என்று நாம் கூறவில்லை.



இதற்கு மாற்றமாக மக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்த பின்னர், ஆலோசனையின் அடிப்படையில் நாம் முடிவுகளை மேற்கொள்வோம். இனங்களுக்கிடையிலான நல்லுறவுக்கு எந்த வேட்பாளர் வித்திடுகின்றாரோ, அவரை நாம் தெரிவுசெய்ய உழைப்போம்.

இனவாதத்தைத் தூண்டி அதில் குளிர்காய நினைப்போரை அடக்குவதற்கான முறையான சட்டங்களை உருவாக்கும் ஆட்சியாளரையே நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். இதுவொரு இக்கட்டான சூழலாகவும் வித்தியாசமான தேர்தலாகவும் இருப்பதால், நாம் தீர்க்கமான முடிவை மேற்கொள்வதே பொருத்தமானது.

நாட்டின் பொருளாதாரத்தை சீரிய முறையில் முன்கொண்டு செல்பவராகவும் கைத்தொழில் மேம்பாட்டில் அக்கறைகொண்டவராகவும் நாட்டின் எதிர்காலத் தலைவர் இருக்க வேண்டும். அத்துடன், முறையான வெளிநாட்டுக்கொள்கையை அவர் பின்பற்ற வேண்டும். பலஸ்தீனத்தை சுதந்திர நாடாக அங்கீகரிக்க வேண்டுமென்ற கோட்பாட்டையும் எதிர்காலத் தலைமை மேற்கொள்ள வேண்டும். இவற்றைதான் நமது கட்சி முன்வைக்கிறது.

அதுமட்டுமின்றி வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகளை தொடர்ந்தும் இழுத்தடித்துக் கொண்டிராமல், இதனை முடிவுக்குக்கொண்டுவரும் ஒருவரை நாம் அடையாளப்படுத்துவது இந்த சந்தர்ப்பத்தில் பொருத்தமானது. இறைவன் மீது நம்பிக்கைகொண்டு, நாம் பொருத்தமான முடிவொன்றையெடுப்போம்' என அவர் உறுதியளித்தார்.

வவுனியா, மன்னார், புத்தளம், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற மேற்படி கலந்துரையாடல்களில், மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள், புத்திஜீவிகள் ஊர்ப்பிரமுகர்கள் மற்றும் ஆதரவாளர்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர். (05)

# தருமபுரம் பகுதியில் வெடிபொருள் மீட்பு





தருமபுர பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறு வண்ணாத்தி ஆறு என்னும் பகுதியில் யுத்த காலத்தில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த நிலையில் மூன்று வடிவ பொருள்கள் மக்களால் இனங்காணப்பட்டு தருமபுர பொலீஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைவாக நீதிமன்ற அனுமதி உடன் சிறப்பு அதிரடி படையினரால் நேற்று (செவ்வாய்க்கிழமை) செயலிழக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (05 - 113)

# கல்முனை பிராந்தியத்துக்கு 28 வைத்தியர்கள் நியமனம்



(பாறுக் ஷிஹான்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள சுகாதார நிறுவனங்களில் கடமையாற்றும் பொருட்டு புதிதாக சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட வைத்தியர்களில் 28 பேர் சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிதாக நியமனம் பெற்ற வைத்தியர்களுக்குரிய சேவைநிலையங்களுக்கான கடிதங்கள் கையளித்தல் மற்றும் அறிமுக நிகழ்வு என்பன திங்கட்கிழமை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றன.

பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரியும், அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்க கல்முனைக் கிளையின் தலைவருமான டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர் அவர்களின் ஒருங்கிணைப்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சம்மாந்துறை, நிந்தவூர் மற்றும் திருக்கோவில் ஆகிய ஆதார வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகர்கள், பிராந்திய பிரிவுத் தலைவர்கள் மற்றும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்க கல்முனை கிளையின் செயலாளர் டொக்டர் எப்.எம்.உவைஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இதன்போது வைத்திய அத்தியட்சகர்கள் மற்றும் பிரிவுத் தலைவர்கள் தத்தமது பிரிவு தொடர்பான விபரங்களையும் பணிமனை மற்றும் வைத்தியசாலைகளில் முன்னெடுக்கப்படுகின்ற சேவைகள், செயற்றிட்டங்கள் தொடர்பான விபரங்களையும் வழங்கினர்.

கல்முனை பிராந்தியத்துக்கு இம்முறை அதிமான வைத்தியர்கள் நியமிக்கப்பட்டதனையடுத்து திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு, அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஒத்துழைப்புடன் மேலதிகமாகவும் இரண்டு வைத்தியர்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# நிறுவை உபகரணங்களை சரிபார்த்து முத்திரையிடல்



(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்ட செயலகத்தின் அளவீட்டு சேவைகளினதும் உபாயங்களினதும் பிரிவினரால் பல்வேறு தராசுகளை பரிசோதனை செய்து சரி பார்க்கும் சான்றிதழ் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கல்முனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட கல்முனை ,மருதமுனை, நற்பிட்டிமுனை, பெரியநீலவணை,ஆகிய பிரதேச வியாபாரிகளின் நிறுவை/அளவை உபகரணங்களை 2024/2025



ஆம் ஆண்டுக்கு சரிபார்த்து முத்திரை பதிப்பதற்கென கடந்த திங்கள் முதல் 13,14 ,15 வரையான 04 நாள்கள் இச்செயற்பாடுகள் காலை 9.30-3.30 மணிவரை கல்முனை பிரதேச செயலக வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி அறிவித் துள்ளார்.

எனவே குறித்த வர்த்தகர்கள் மீனவர்கள் தங்களுடைய வியாபார அளவை நிறுவை உபகரணங்களை கொண்டு சென்று முத்திரையிட்டுக் கொள்ளுமாறு கல்முனை பிரதேச செயலாளர் அறிவித்தல் விடுத்துள்ளார்.

இதன் போது இலத்திரனியல் தராசுகள் பாரம்பரிய தராசுகள் நிறுக்கும் உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு அளவீட்டுடன் கூடிய தராசுகள் சரி பார்க்கப்பட்டு சீல் செய்யப்பட்டு தரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் தராசுகளின் வகைகளுக்கேற்ப தராசுகள் இனங்காணப்பட்டு இச்செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டு வருவதுடன் வர்த்தகர்கள் மீனவர்கள் உள்ளிட்டோர் ஆர்வத்துடன் இதில் கலந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் தராசுகளை பரிசோதனை செய்து சரி பார்க்கும் சான்றிதழ் இன்றி பல வியாபாரிகள் மோசடி நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவது தொடர்பிலும் மக்களால் குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே அளவீட்டு தராசுகளுக்கான தரச் சான்றிதழ்களை 1995 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க அளவீட்டு அலகுகளும் நியமங்களும் மற்றும் சேவைகளும் சட்டத்தின் பிரகாரம் 2024/ 2025 ஆம் ஆண்டிற்கான நிறுக்கும் அளக்கும் உபகரணங்கள் பரீட்சித்து முத்திரையிடல் என்பதுடன் மேற்குறித்த சட்டத்தின் 37 ஆவது பிரிவின் படி முன்பின்னாக 12 மாத கால இடைவெளியில் முத்திரையிடாது நிறுவைகள் பாவித்தல் அல்லது வெளிக்காட்டிவைத்தல் தண்டனைக்குரிய குற்றமாகும் என அளவீட்டு சேவைகளினதும் உபாயங்களினனும் பிரிவினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

# தம்பலகாமம் பிரதேச செயலக சான்றிதழ்கள் வழங்கும்

(ஹஸ்பர் ஏ.எச்.)

கல்வி அமைச்சின் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான நடாத்தப்பட்ட பாடநெறிகளை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று (செவ்;வாய்க்கிழமை) இடம் பெற்றது.

குறித்த பாடநெறியானது தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள ஆதிகோணேஸ்வரா மகாவித்தியாலயம்,சிராஜ் முஸ்லிம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் பாடநெறிகள் இடம் பெற்றன.

ஆங்கிலம்,தகவல் தொழில் நுட்பம், தொழில் வழிகாட்டல் போன்ற பாடநெறிகள் 45 மணித்தியாலங்களை கொண்டதாக மூன்று மாத காலமாக இடம் பெற்றன .

தேசிய கல்வி நிறுவக வழிகாட்டல்களை கொண்ட பாடநெறியாக இது அமையப் பெற்றிருந்தன. இதில் கலந்து கொண்டு முழுமையாக பூர்த்தி செய்த மாணவ மாணவிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. மொத்தமாக 107 இளைஞர் யுவதிகள் இதன் போது சான்றிதழ்களை பெற்றுக் கொண்டனர்.

எதிர்காலத்தில் தொழில் வழிகாட்டளுக்கான துறைகளை தேர்ந்தெடுப்பதற்கான வழிகாட்டல்களும் இதில் உள்ளடக்கப்பட்டிருந்தன. தொழில்வாண்மையான துறை சார் தொழில்களுக்கு செல்ல குறித்த பாடநெறிகள் தயார்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

தொழில் வழிகாட்டலுடன் கூடிய சிறந்ததொரு முன்னேற்பாடாக இது அமையப் பெற்றுள்ளது. மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு போன்றவற்றின் மூலமாக எதிர்கால திட்டமிடலுக்கான ஒரு அடித்தளமாக மாணவர்களுக்கான உகந்த பாடநெறியாக எதிர்பார்க்கப்படுகிறது.

குறித்த சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி கலந்து சிறப்பித்தார்.

இதில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஜங்கரன் உட்பட மாணவ மாணவிகள் என பலரும் கலந்து கொண்டனர்.(05)

# ஆசிரியர் உதவியாளர் போட்டி பரீட்சைக்கான தடையுத்தரவு 17 இற்கு முன் மீளபெறப்படுமா?

## கனகராஜ் கேள்வி



(பி.கேதீஸ்)

ஆசிரியர் உதவியாளர் போட்டி பரீட்சைக்கான தடை உத்தரவை எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதியின் தலையிட்டால் மீள பெறப்பட்டால் மட்டுமே திட்டமிட்டபடி பரீட்சைகள் நடைபெற வாய்ப்பு இருக்கிறது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் தலையீட்டால் ஆசிரிய உதவியாளர் போட்டி பரீட்சைக்கான தடை உத்தரவு மீள பெறப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட பாடசாலைகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தை நாடி தடை உத்தரவு பெற்றது இது இரண்டாவது முறையாகும். வரலாற்றில் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு சமூகமும் தமது கல்விக்காக பல்வேறு சலுகைகளின் அடிப்படையில் ஆசிரியர் நியமனங்களை பெற்றிருக்கின்றன.

அல்ராஜ் பதியுதீன் மஹ்மூத் கல்வி அமைச்சராக இருந்தபோது எட்டாம் தரத்தில் சித்தியடைந்த முஸ்லிம்களுக்கு ஆசிரியர் நியமனங்களை பெற்றுக் கொடுத்தார். அதேபோல சௌமியமூர்த்தி தொண்டமான் சாதாரண தர தகைமையுடன் ஆசிரியர் நியமனங்களை பெருந்தோட்ட பாடசாலைகளுக்கு பெற்றுக் கொடுத்தார். இவ்வாறு சமூக நலனின் அடிப்படையில் கடந்த காலங்களில் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. சகோதர சமூகங்கள் புரிந்துணர்வின் அடிப்படையில் இவற்றை நோக்க வேண்டும். எவ்வாறினும் பெருந்தோட்ட பிரதேச ஆசிரியர் உதவியாளர் விண்ணப்பதாரிகளுக்கு உதவும் நோக்கத்தில் நாம் சட்ட ஆலோசனைகளை பெற்று வருகிறோம். மலையகத்தை சார்ந்த சட்ட வல்லுநர்கள் ஆசிரியர் உதவியாளர் விண்ணப்பத்தாரிகளின் நலன் கருதி உதவ வேண்டும் என எதிர்பார்க்கிறோம். அதே நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் கூறுவது போல எதிர்வரும் 17ஆம் தேதிக்கு முன்னர் ஜனாதிபதியின் தலையீட்டில் இதற்கு ஒரு முடிவு காண வேண்டும் அல்லது நாம் இந்த விடயத்தை சட்டரீதியாக எதிர்கொள்வதற்கு தயாரிப்புகளை மேற்கொண்டு வருகிறோம் எனவும் கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார். (05)

# தேற்றாத்தீவில் வாகன விபத்து இருவர் படுகாயம்



மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேற்றாத்தீவு பிரதான வீதியில் திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற வாகன விபத்து இருவர் படுகாயமடைந் துள்ளனர்.

களுவாஞ்சிக்குடி நோக்கி பயணித்த இரு மோட்டார் வண்டிகளும், ஒன்றுடன் ஒன்று பின்பக்கமாக மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்த இருவரும், சிகிச் சைக்காக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் , விபத்து தொடர்பான விசாரணையை களுவாஞ்சிகுடி பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர். (05)



# கூட்டு இராணுவப் பயிற்சியில் பங்கேற்க இந்தியப் படையினர் இலங்கை வருகை







இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையே பரஸ்பர நட்புறவை மேன்மேலும் விருத்திசெய்யும் முக்கிய படிமுறையாக, வருடந்தோறும் ஏற்பாடு செய்யப்படுகின்ற மித்ரசக்தி போர் பயிற்சி 12 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை மாதுரு ஓயா பிரதேசத்தில் நடத்துவதற்குத் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் கலந்துகொள்ளவிருக்கும் இந்திய இராணுவ வீரர்கள் 2024 ஓகஸ்ட் 12 ஆம் திகதி மத்தள விமான நிலையத்தின் ஊடாக இலங்கைக்கு வருகை தந்தனர்.

இந்திய இராணுவ படையினரை காலாட்படை பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் வஜிர வெலகெதர, மித்ர சக்தி இராணுவ பயிற்சி பணிப்பாளர் மேஜர் ஜெனரல் தினேஷ் உடுகம, இலங்கையின் இந்தியாவுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதிகள் மற்றும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளால் வரவேற்கப்பட்டனர்.

இப்போர்பயிற்சியில்இந்தியஇராணுவத்தை பிரநிதித்துவப்படுத்தி கேணல் ரவீந்திர அலவட் அவர்களின் தலைமையில் 18 அதிகாரிகளும் 102 சிப்பாய்களும் இலங்கை இராணுவத்தை பிரநிதித்துவப்படுத்தி கஜபா படையணியின் 18 அதிகாரிகளும் 102 சிப்பாய்களும் பங்கேற்கவுள்ளனர்.

10 ஆவது தடவையாக இம்முறை இடம்பெறும் இந்த இராணுவப்பயிற்சிகள் 2012 ஆம்ஆண்டுஆரம்பிக்கப்பட்டுஇலங்கையிலும் இந்தியாவிலும் நடத்தப்பட்டுள்ளன. இரு நாடுகளுக்கிடையே அனுபவப் பகிர்வு மற்றும் நட்புறவு மூலம் பிராந்திய பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே அவர்களின் பூரண மேற்பார்வையில் இந்த இராணுவப் பயிற்சி நடைபெறுவதுடன், இந்த இராணுவ பயிற்சியின் பணிப்பாளராக 59 ஆவது காலாட் படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் தினேஷ் உடுகம செயற்படுகின்றார். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.08.2024இல் வெளியிடப்பெற்றது